# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051

## 2025–2026 கல்வியாண்டிற்கான
## இளநிலை பட்டப்படிப்புகளுக்கான சேர்க்கை அறிவிப்பு

2025–26ஆம் கல்வியாண்டிற்கான கீழ்க்கண்ட இளநிலை பட்டப்படிப்புகளுக்கான சேர்க்கைக்கு தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்களிடமிருந்து 26.05.2025 காலை 10.00 மணி முதல் 20.06.2025 மாலை 05.00 மணி வரை இணையதளம் மூலமாக விண்ணப்பங்கள் (Online applications) வரவேற்கப்படுகின்றன.

| பட்டப்படிப்புகள் | மொத்த இடங்கள் | | கல்லூரி |
|---|---|---|---|
| கால்நடை மருத்துவம் மற்றும் கால்நடை பராமரிப்பு பட்டப்படிப்பு BVSc & AH 5½ ஆண்டுகள் (4½ ஆண்டுகள் + 1 வருட உள்ளிருப்பு பயிற்சி – *MSVE விதிமுறை 2016 ன்படி*) | 660* | 120* | சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை – 600 007 |
| | | 100 | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் – 637 002 |
| | | 100 | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி – 627 358 |
| | | 100 | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் – 614 625 |
| | | 80** | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைவாசல் கூட்ரோடு, சேலம் – 636 112 |
| | | 80** | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வீரபாண்டி தேனி – 625 534 |
| | | 80** | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பண்ணைக்கிணறு, உடுமலைப்பேட்டை – 642 205 |
| உணவுத் தொழில்நுட்ப பட்டப்படிப்பு BTech - Food Technology (4 ஆண்டுகள்) | 40* | | உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி, கோடுவளி, சென்னை – 600 052 |
| கோழியின தொழில்நுட்ப பட்டப்படிப்பு BTech – Poultry Technology (4 ஆண்டுகள்) | 40 | | கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி, மத்திகிரி, ஒசூர் – 635 110 |
| பால்வளத் தொழில்நுட்ப பட்டப்படிப்பு BTech – Dairy Technology (4 ஆண்டுகள்) | 20* | | உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி, கோடுவளி, சென்னை – 600 052 |

** தமிழக அரசு மற்றும் இந்திய கால்நடை மருத்துவ குழுமத்தின் / இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் ஆணைக்கேற்ப மாற்றத்திற்கு உட்பட்டது*
*** இந்திய கால்நடை மருத்துவக் குழுமத்தின் ஆணைக்கேற்ப மாற்றத்திற்கு உட்பட்டது*

***குறிப்பு:***
1) *BVSc & AHல் 15 சதவீத இடங்கள், இந்திய கால்நடை மருத்துவக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது*
2) *BTech (Food Technology) மற்றும் (Dairy Technology) ல் 15 சதவீத இடங்கள், இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது*

தகவல் தொகுப்பேடு, சேர்க்கைத் தகுதிகள், தேர்வு செய்யப்படும் முறை மற்றும் இதர விவரங்களை https://adm.tanuvas.ac.in என்ற இணையதளத்தில் 26.05.2025, காலை 10.00 மணி முதல் காணலாம். விண்ணப்பதாரர்கள் மேற்கூறிய இணையதளத்தில் விண்ணப்பம் மற்றும் தகுந்த சான்றிதழ் நகல்களை பதிவேற்றம் (Upload) செய்து, 20.06.2025 மாலை 05.00 மணிக்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். இணையதள விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். பிற வடிவ விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை பல்கலைக்கழகத்திற்கு தபால் மூலம் அனுப்பத் தேவையில்லை.

அயல்நாடு வாழ் இந்தியர் (NRIs) / அயல்நாடு வாழ் இந்தியரின் குழந்தைகள் (Wards of NRIs) / அயல்நாடு வாழ் இந்தியரின் நிதி ஆதரவு பெற்றோர் (NRI Sponsored) மற்றும் அயல்நாட்டினர் (Foreign National) ஆகியோர்களுக்கான இட ஒதுக்கீடு, இணையதள விண்ணப்ப வழிமுறைகள் மற்றும் இதர விவரங்களை https://adm.tanuvas.ac.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

தலைவர்
சேர்க்கைக்குழு (இளநிலை பட்டப் படிப்பு)
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
மாதவரம் பால்பண்ணை
சென்னை – 600 051

இடம்: சென்னை – 600 051
நாள் : 25.05.2025